# பிரதம மாவட்ட நீதிமன்றம், திருவள்ளூர்

இந்நீதிமன்ற உதவியாளர் திரு. மோகன் அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு இந்திய சாட்சிய சட்டம் 1871, பிரிவு 1–ன் கீழ் மனுதாரர் / எதிர்மனுதாரர் தரப்பு 1ஆவது சாட்சியாக விசாரிக்கப்பட்டு **2026–**ஆம் ஆண்டு **மார்ச்** திங்கள் **12** ஆம் நாள் பதிவு செய்யப்பட்டது.

பெயர்........................................................................ கிராமம்........................................................................

தந்தை/கணவர் பெயர்.......................................... தாலுக்கா......................................................................

தொழில்.................................................................... மாவட்டம்...................................................................

---

LAOP No. 1210/2025, LAOP No. 1192/2025, LAOP No. 1189/2025
LAOP No. 1191/2025, LAOP No. 1190/2025, LAOP No. 1209/2025
LAOP No. 1188/2025, LAOP No. 1187/2025

## 12.03.2026

**ம.த.சா.1 – திரு. பிரகாஷ் த/பெ. சுப்புராயலு**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்

**முதல் விசாரணை :**

நான் திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லியில் வசித்து வருகிறேன். நான் இந்த மனுவின் மனுதாரர். நான் மனுதாரர் தரப்பு சாட்சி 1. நான் மற்ற 7 மனுதாரர்கள் சார்பாகவும் சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பு சாட்சியத்தை நான் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்றாக தெரியும். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதனை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். என் தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை நான் தாக்கல் செய்கிறேன்.

1. 25–04–2016 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் (ஆவண எண் 517/2016) **ம.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2. 21–09–2015 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் (ஆவண எண் 1325/2015) **ம.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3. 13–03–2013 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் (ஆவண எண் 351/2013) **ம.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 03–07–2013 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் (ஆவண எண் 888/2013) **ம.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 06–03–2013 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் (ஆவண எண் 283/2013) **ம.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. எனது ஆதார் அடையாள அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) **ம.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.**

**1வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை.**

மற்ற 7 மனுதாரர்களுக்கு சேர்த்து நான் சாட்சியம் அளிப்பதற்கு பவர் ஏதாவது கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. நானும் மற்ற மனுதாரர்களும் உறவினர்கள் அல்ல என்றால் சரிதான். ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள் என்றால் சரியல்ல. வெவ்வேறு ஊரைச்சேர்ந்தவர்கள். நான் தாக்கல் செய்த ஆவணங்களில் ரூபாய் 3000 தலா சதுர அடிக்கு என்பதை நிரூபிக்க ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். அனைத்து ஆவணங்களும் தலா சதுர அடிக்கு ரூபாய் 500க்கும் குறைவாக உள்ளது என்றால் சரிதான். சந்தை மதிப்பு ஒரு சதுர அடி ரூ.5000 என்பதை நிரூபிக்க ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களுக்கு அருகில் பெரிய கம்பெனிகள், பள்ளிகள் உள்ளதை நிரூபிக்க ஜிபிஎஸ் புகைப்படம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்கள் எந்த நோக்கத்திற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் ரயில் நிலையத்திற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டது. பொது மக்களின் பயன்பாட்டிற்காக நகரியில் இருந்து திண்டிவனம் செல்ல இருப்புப்பாதை அமைக்கும் திட்டத்திற்காகத்தான் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதில் எந்த வியாபார நோக்கமும் இல்லை என்றால் சரிதான். நகரியில் இருந்து திண்டிவனம் வரை உள்ள கிராமத்தில் உள்ள நிலங்களின் மதிப்பு ஒவ்வொரு கிராமத்திற்கும் வேறுபடும் என்றால் சரிதான். நிலங்கள் ஆர்ஜிதம் செய்வதற்கு முன்பாக அறிவிப்பு கொடுத்த தேதியில் புதிய நில ஆர்ஜிதம் சட்டத்தின் படி இழப்பீடு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, குறைவாக கொடுத்துள்ளார்கள்.

நான் தாக்கல் செய்துள்ள 6 ஆவணங்களையும் விசாரணை அதிகாரியும் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. புதிய சட்டத்தின்படி எங்கள் நிலங்களுக்கு சரியான முறையில் இழப்பீடு கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் அதிக தொகை கேட்க எங்களுக்கு முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல. கோரிக்கை மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**2வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை.**

1வது எதிர்மனுதாரரின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.